1984 மார்ச் 24] [திரு. ச. இராமச்சந்திரன்]

சாட்சிகளின் விசாரணையில், இறந்து போன மகேஸ்வரி ஒரு பிளாஸ்டிக் வாளியில் வென்னீரும், ஒரு துண்டு, பாவாடை, லிரில் சோப்புடைய சோப்புப் பெட்டி, சீயக்காய்த் தூள் அனைத்தையும் அவருடைய குளியல் அறையில் குளிப்பதற்காக வைத்திருந்ததாகக் கூறுகின்றனர்.

இதனால் மகேஸ்வரி குளிப்பதற்கு ஆயத்தமாகி, வென்னீரில் தண்ணீர் கலக்க தண்ணீர் எடுத்துவர கிணற்றிற்குச் சென்ற பொழுது கிணற்றில் தவறி விழுந்து இருக்கலாம் என்று கூறப்படுகிறது. அத்துடன் மேற்படி கிணற்றிற்கு சுற்றுச் சுவர் இல்லை. தரையிலிருந்து $2\frac{1}{2}$ அடி தூரத்தில் தண்ணீர் உள்ளது. இடையில் மூன்று படிக்கற்கள் பதிக்கப்பட்டு, மூன்றாவது படிக்கல் தண்ணீரில் உள்ளது. இந்தப் படிக் கற்களில் நின்றுதான் அனைவரும் தண்ணீர் எடுப்பது வழக்கம். அவ்வாறே இறந்து போன மகேஸ்வரியும் தண்ணீர் எடுத்திருக்க வேண்டும் எனச் சொல்லப்படுகிறது.

பிரேதப் பரிசோதனையில், எந்தவித புறக்காயமோ உட்காயமோ இறந்த மகேஸ்வரியின் பிரேதத்தில் தென்படவில்லை என்பதாலும், தாக்குதலுக்குண்டான அடையாளங்கள் இல்லாமையினாலும், விசாரணை அதிகாரியால், இறப்பின் சரியான காரணத்தை அறிய முடியவில்லை. இரசாயனப் பரிசோதனையின் அறிக்கைக்காக காத்திருப்பதாலும், இறப்பின் சரியான காரணம் தெரியாததாலும் இவ்வழக்கில் மேற்கொண்டு புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆகவே அவை நடவடிக்கையை ஒத்திவைத்து இதுகுறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

4. அறிக்கை அளித்தல். —

விதி 107-ன் கீழ் போக்குவரத்துத்துறை அமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 107-வது விதியின் கீழ் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, 20-3-1984 அன்று நடந்த போக்குவரத்து மானியத்தின் மீது நான் பதிலளிக்கும்போது கீழ்க்கண்டவாறு பேசியிருந்தேன்:

'' யார், யார் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று கேட்டார்கள். நடராஜன், ராஜு, நீதிவிளங்கன், ராஜகோபால் இப்படி ஏறத்தாழ 8 பேர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.....நான் சொல்லியது ஏதோ இந்த 8 பேர்களோடு நிறுத்திவிடுவதில்லை ''

இதற்குப் பதிலாகக் கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும் :—

''இப்படி ஏறத்தாழ 6 பேர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்......நான் சொல்லியது ஏதோ இந்த 6 பேர்களோடு நிறுத்திவிடுவதில்லை. இந்த 6 பேர்களுடைய விவரம் திரு. மு. ராஜகோபாலன், காசாளர், பணி எண். 125. இவர் நிரந்தர வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். திரு. என். ராமச்சந்திரன், உதவியாளர், பணி எண். 239, காசோலை எழுத்தர், கணக்குப்பிரிவு. இவர் நிரந்தர வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். திரு. டி. நீதிவிளங்கள், இளநிலை கண்காணிப்பாளர், பணி எண். 295 இவர் நிரந்தர வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். திரு. ஆர். நடராஜன், முதுநிலை கண்காணிப்பாளர், பணி எண். 50. இவர் நிரந்தர வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். திரு. எம். ராஜு, துணை மேலாளர், கணக்கு. இவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். திரு. வி. ராமநாதன், முதன்மைக் கணக்கு அலுவலர், இவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) வேதாரணியம் விம்கோ உப்புத் தொழிற்சாலை தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் எம். எஸ். மாணிக்கம், எம். செல்லமுத்து, டி. மணி, ரா. கிருஷ்ணன், ஜே. ஹேமச்சந்திரன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : துணைத் தலைவர் அவர்களே, வேதாரண்யத்திலுள்ள விம்கோ உப்புத் தொழிற்சாலை மூடப்பெற்றுள்ளதால் தொழிலாளர் படும் இன்னல் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.